# அண்ணா கேட்டதை அவரது தமிழ்நாடு கேட்கிறது!

## தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்... 2 ஆம் பக்கத் தொடர்ச்சி

இந்திய மாநிலங்கள் அனைத்திற்கும் முன்னோடியாக போர் நிதி திரட்டித்தந்த தி.மு.க.வையும் அதன் அரசையும் பார்த்து தேசவிரோதிகள் என்கிறார்கள், தேசத்தந்தையைப் படுகொலை செய்த கோட்சேவின் கொள்கையை ஆதரிப்பவர்கள். நாம் தாய்நாட்டை மதிக்கிறோம். தாய்மொழியை உயிரெனக் காக்கின்றோம். வங்கதேசத்தில் தாய்மொழியையும் அதன் பண்பாட்டுக் கூறுகளையும் காத்திடுவதற்காகப் போராடி உயிரிழந்த மாணவர்களின் தியாகத்தைப் போற்றும் வகையில், பிப்ரவரி 21ஆம் நாளை தாய்மொழி நாளாக அறிவிக்கவேண்டும் என வங்கதேசத்தின் பிரதிநிதிகள் ஐ.நா.மன்றத்தில் முன்மொழிந்தனர். அதற்கான ஆதரவையும் பெற்றனர்.

ஐ.நா.அவையின் யுனெஸ்கோ அமைப்பின் அதிகாரப்பூர்வ அறிவிப்பின்படி 1999ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 21ஆம் நாள் உலகத் தாய்மொழி நாளாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. ஒரு மொழி அழிந்தால், அந்த இனம் அழிக்கப்படும். அதன் மரபு வழி அறிவுச் செல்வம் மொத்தமாக அழிந்துபோகும். அதற்கு மாறாக, அவரவர் தாய்மொழிகளின் மீதான பிற மொழி ஆதிக்கத்தைத் தடுக்கும்போது, மொழி-பண்பாட்டு மரபுகளுக்கான விழிப்புணர்வை வென்றெடுத்து, உலக மக்களிடையே ஒற்றுமையை வளர்த்தெடுக்க முடியும் என்பதுதான் தாய்மொழி நாளின் நோக்கம்.

**வங்காள மொழி மாணவர்கள் தங்கள் தாய்மொழியைக் காத்திட 1952ல் உயிர் கொடுத்தார்கள். அவர்களின் போற்றுதலுக்குரிய தியாக வரலாற்றுக்கு முன்பே, இந்தியா-பாகிஸ்தான் - பங்களாதேஷ் அனைத்தும் ஒரே நாடாக பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இருந்த 1938ஆம் ஆண்டிலேயே, சென்னை மாகாணத்தில் மூதறிஞர் ராஜாஜியின் அரசு திணிக்க முயன்ற இந்தியை எதிர்த்து, தாய்மொழியாம் தமிழைக் காக்கும் போராட்டத்தில் நடராசன்தாளமுத்து என இருவர் தங்கள் உயிரைக் கொடுத்த தியாக வரலாறு திராவிட இயக்கத்திற்கு உண்டு.**

> நம் தாய்மொழி போலவே மற்றவர்களின் தாய்மொழியையும் மதிக்கிறோம். இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்களும் நம் சகோதர – சகோதரிகள் தான். இந்தித் திணிப்பால் தமது தாய்மொழிகளை இழந்த வடமாநிலங்களின் சகோதர-சகோதரிகளின் நிலை தமிழ்நாட்டுக்கு ஏற்பட்டுவிடக்கூடாது என்பதே நம் மொழிக் கொள்கை.

மொழி உணர்வுமிக்க வங்காள தேச மாணவர்கள் பாகிஸ்தான் போலீசாரால் சுட்டுக்கொல்லப்பட்டனர். தமிழ்நாட்டில் 1965ஆம் ஆண்டு மொழிப் போர்க்களத்தில் திராவிட இயக்கத்தைச் சேர்ந்த மாணவர்களும் இளைஞர்களும் இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து, தாய்மொழியைக் காப்பதற்கு தங்கள் உடலுக்குத் தாங்களே தீவைத்துக்கொண்டு, 'தமிழ் வாழ்க -இந்தி ஒழிக' என்று முழங்கியபடியே உயிரைத் தியாகம் செய்தனர். காவல்துறையின் துப்பாக்கிச் சூட்டுக்கு மட்டுமின்றி, துணை ராணுவத்தின் வேட்டைக்கும் பலியான தீரர்களின் வரலாற்றுப் பக்கங்களைக் கொண்டவர்கள் நாம். உலகத் தாய்மொழி நாள் என்பது பிப்ரவரி 21ஆம் தேதி கடைப்பிடிக்கப்பட்டாலும் ஒவ்வொரு நாளுமே நமக்குத் தாய்மொழி நாள்தான். ஆதிக்க மொழிகளிடமிருந்து அன்னைத் தமிழைக் காப்பதற்கு எல்லா நாளிலும் விழிப்புடன் இருப்போம்.

நம் தாய்மொழி போலவே மற்றவர்களின் தாய்மொழியையும் மதிக்கிறோம். இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்களும் நம் சகோதர – சகோதரிகள் தான். இந்தித் திணிப்பால் தமது தாய்மொழிகளை இழந்த வடமாநிலங்களின் சகோதர – சகோதரிகளின் நிலை தமிழ்நாட்டுக்கு ஏற்பட்டுவிடக்கூடாது என்பதே நம் மொழிக் கொள்கை. இந்த கொள்கைப் பார்வை தற்போது கர்நாடகம், கேரளம், மேற்கு வங்காளம், மராட்டியம் உள்ளிட்ட பல மாநிலங்களிலும் வெளிப்படுகிறது. "கன்னடத்தைப் புறக்கணித்து,இந்தியைத்திணிப்பவர்களை ஏற்க மாட்டோம்" என்று கூறி கர்நாடகாவில் இந்தி எழுத்துகளை அழிப்பது பற்றிய காணொலி சமூக வலைதளங்களில் பரவிக் கொண்டிருக்கிறது.

> 'இந்தி திவாஸ்' என்று கொண்டாடப்படுவது போல, எட்டாவது அட்டவணையில் இடம்பெற்றுள்ள 22 மொழிகளுக்கான நாட்கள் உண்டா? இந்தியைத் தவிர மற்ற இந்திய மொழிகளை பாரபட்சமாக அணுகுவது ஏன்?

இயற்கைத்தன்மையும் இயல்பான விருப்பமும் கொண்டவற்றைத்தான் உடலும் உள்ளமும் ஏற்றுக்கொள்ளும். திணிக்கப்படுவது எதுவாக இருந்தாலும் உடனடியாக அது வெளியேற்றப்படுவதுடன், மனிதர்களின் திறனையும் கெடுத்துவிடும். மொழித்திணிப்பு என்பதும் அப்படித்தான். தமிழ்நாடு முன்னெடுத்த மொழிக்கொள்கை அறிவியல்பூர்வமானதும் ஆக்கப்பூர்வமானது மாகும். சமத்துவம் என்பது மொழிகளுக்கிடையிலும் இருக்க வேண்டும்.

> ரூபாய் நோட்டில் உள்ள இந்தியை அழிப்பீர்களா என்று எங்களைப் பார்த்து கேட்கும் அதிமேதாவிகளான உங்களைப் பார்த்து நாங்கள் கேட்கிறோம். ரூபாய் நோட்டில் அச்சிடப்பட்டுள்ள மொழிகள் அனைத்தையும் இந்தியாவின் ஆட்சிமொழியாக அறிவிக்கத் தயக்கம் ஏன்? தமிழ் மீது பிரதமர் உள்ளிட்ட ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியாளர்களுக்கு உண்மையான அக்கறை இருக்குமானால் உயர்தனிச் செம்மொழி என்ற தகுதியுடைய எங்கள் தாய்மொழியை ஆட்சிமொழியாக்கிட எது தடுக்கிறது?

இந்திய அரசியல் சட்டம் 351வது பிரிவை சுட்டிக்காட்டி, இந்தி மொழியை வளர்க்கும் பொறுப்பை ஒன்றிய அரசு தீவிரமாக மேற்கொள்கிறது. ஆண்டுதோறும் செப்டம்பர் 14ஆம் நாளை 'இந்தி திவாஸ்' என்ற பெயரில் கொண்டாடுகிறது. இந்தியைக் கொண்டாடும் அந்த நாளில், இந்தித் திணிப்பு முழக்கங்களை ஒன்றிய ஆட்சியாளர்கள் முன்வைக்கிறார்கள். இந்திய மொழிகளை அச்சுறுத்தும் திட்டங்களை வெளிப்படுத்துகிறார்கள்.

'இந்தி திவாஸ்' என்று கொண்டாடப்படுவது போல, எட்டாவது அட்டவணையில் இடம்பெற்றுள்ள 22 மொழிகளுக்கான நாட்கள் உண்டா? இந்தியைத் தவிர மற்ற இந்திய மொழிகளை பாரபட்சமாக அணுகுவது ஏன்? ரூபாய் நோட்டில் உள்ள இந்தியை அழிப்பீர்களா என்று எங்களைப் பார்த்து கேட்கும் அதிமேதாவிகளான உங்களைப் பார்த்து நாங்கள் கேட்கிறோம். ரூபாய் நோட்டில் அச்சிடப்பட்டுள்ள மொழிகள் அனைத்தையும் இந்தியாவின் ஆட்சிமொழியாக அறிவிக்கத் தயக்கம் ஏன்? தமிழ் மீது பிரதமர் உள்ளிட்ட ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியாளர்களுக்கு உண்மையான அக்கறை இருக்குமானால் உயர்தனிச் செம்மொழி என்ற தகுதியுடைய எங்கள் தாய்மொழியை ஆட்சிமொழியாக்கிட எது தடுக்கிறது?

எங்கள் அண்ணா அன்று நாடாளுமன்ற மாநிலங்களவையில் கேட்டதைத்தான் அவரது தம்பிகளான நாங்களும் கேட்கிறோம். அவரால் பெயர் சூட்டப்பட்ட எங்கள் தமிழ்நாடு கேட்கிறது. இலட்சியம் நிறைவேறும்வரை கேட்டுக்கொண்டே இருப்போம்.

(தொடரும்)

அன்புடன்

**மு.க. ஸ்டாலின்**

திருவள்ளுவர் ஆண்டு 2056
மாசி 21
05.03.2025

### ஈரோடு நாடாளுமன்றத் தொகுதி

## வாக்காளர்களுக்கு கே.இ.பிரகாஷ் எம்.பி. நன்றி தெரிவித்தார்!

ஈரோடு, மார்ச் 6 -

ஈரோடு நாடாளுமன்ற தொகுதி இந்தியா கூட்டணி கட்சிகளின் சார்பில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினராக வெற்றி பெற்ற கே.இ.பிரகாஷ் ஈரோடு நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட மாவட்ட, மாநகர பகுதிகளில் விநாயகர் கோவில் வீதி 1, KAS நகர் கருங்கல்பாளையம், வளையக்கார வீதி, 1, 2 செட்டியார் கடை பெரியார் நகர், அசோகபுரி அம்மு மெஸ் கார்னர், மேட்டுக்கடை நால்ரோடு, நஞ்சனாபுரம், ராயபாளையம், நசியனூர் ரவுண்டாணா, தயிர்பாளையம், ஆலுச்சாம் பாளை யம், பேரோடு மாரியம்மன் கோவில், பச்சப்பாளி மாரப்பம் பாளையம், காலிங்கராயன் பாளையம் பழைய கால் நடை மருத்துவமனை அருகில், லக்ஷ்மி நகர், சித்தோடு நால் ரோடு, ராய பாளையம், ஆர். என். புதூர் மறவா பாளையம், கொங்கம் பாளையம், கனிராவுத்தர் குளம், எஸ்.எஸ்.பி. நகர் மாணிக்கம் பாளையம், சூளை, மாணிக்கம் பாளையம் ஹவுசிங் யூனிட் வில்லரசம்பட்டி, திண்டல் கவுண்டச்சி பாளையம் ஊராட்சி, சங்கு நகர் குமாரவலசு ஊராட்சி, டீச்சர்ஸ் காலனி குட்டபாளையம் ஊராட்சி, சூரம்பட்டி போலீஸ் ஸ்டேஷன், 2 நம்பர் பஸ் ஸ்டாப், பாரதிபுரம், சூரம் பட்டி, மாரியம்மன் கோவில், காசிபாளை யம், சாஸ்த்ரி நகர், நாடார் மேடு, கொல்லாம் பாளையம்,

வெண்டி பாளையம் மூலபாளையம் சடையம் பாளையம் சேனாதி பாளையம் கவுண்டச்சி பாளையம் பஸ் ஸ்டாப், வெள்ளோடு மாரியம்மன் கோவில்,

வெள்ளோடு ரவுண டாணா, ஊராட்சி மன்ற அலுவலகம் அருகில், பெருந்துறை ஆர். எஸ், பாரவலசு பிரிவு ஆகிய இடங்களில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களித்த வாக்காள பெருமக்களுக்கு நன்றி கூறினார்.

நிகழ்வில் மாநில இளைஞரணி துணைச் செயலாளர், மாநகர கழக செயலாளர் சுப்பிரமணியம், மாவட்ட கழக துணை செயலாளர்கள் செல்லபொன்னி, க.சின்னையன், வழக்கறிஞர் அணி செயலாளர் மா.சு.ராதாகிருஷ்ணன், பகுதி கழக செயலாளர்கள் வி.சி.நடராஜன், பொ.ராமசந்திரன், அக்னி சந்துரு, குறிஞ்சி என்.தண்டபாணி, வி.செல்வராஜ், வில்லரசம்பட்டி முரு கேசன், குமாரவேலு , லட்சுமண குமார், ஈரோடு ஒன்றிய கழக செயலாளர் தோப்பு சதாசிவம், தலைமை கழக பேச்சாளர் ஈரோடு இளைய கோபால் , ஈரோடு ஒன்றியம் ரகுநாதன், ராஜா பாலசுப்ரமணியம், நசியனூர் மோகனசுந்தரி, சித்தோடு பேரூர் தனலட்சுமி, கண்ணகி தம் பண்ணன் , பார்த்திபன் IT wing , மண்டல தலைவர் காட்டு சுப்பு என்கிற சுப்ரமணியம், துணை மேயர் செல்வராசு, மதிமுக முசிறி ரவிச்சந்திரன், மாமன்ற உறுப்பினர்கள் வனிதா மணி, ஜெகநாதன், ஜெகதீசன் , முன்னாள் பேரூர் செயலாளர் வைரம் பெரியசாமி, வார்டு செயலாளர் ஜெயகுமார் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### காங்கேயம் வட்ட மலைக்கரை ஓடையின் குறுக்கே

## ரூ.3.91 கோடியில் தடுப்பணை அமைக்கும் பணி!

### அமைச்சர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்தார்!

திருப்பூர், மார்ச் 6-

திருப்பூர் மாவட்டம், காங்கேயம் ஒன்றியம், வீரணம்பாளையம் ஊராட்சி, காட்டு நாயக்கன் பாளையத்தில் நீர்வளத்துறையின் சார்பில் வட்டமலைக்கரை ஓடையின் குறுக்கே ரூ.3.91 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை அமைக்கும் பணியினை 22.02.2025 சனிக்கிழமை அன்று தாராபுரம் வருவாய் கோட்டாட்சியர் ஃபெலிக்ஸ் ராஜா தலைமையில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்தார்.

அமைச்சர் தெரிவித்தாவது : தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நீர்வளத்துறையின் சார்பில் தமிழக மக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் இன்றைய தினம், காங்கேயம் ஒன்றியம், வீரணம் பாளையம் ஊராட்சி, வட்டமலைக்கரை ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணியினை துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

வட்டமலைக்கரை ஓடை அமராவதி ஆற்றின் கிளை நதிகளில் ஒன்றாகும். இது பல்லடம் பொள்ளாச்சி ரோட்டில் அனுப்பப்பட்டி என்ற இடத்தில் உற்பத்தியாகி பல்லடம் மற்றும் கொடுவாய் பகுதிகளில் பெய்யும் மழைநீர் மற்றும் பரம்பிக்குளம் ஆழியாறு நீர்த்தேக்க கசிவு நீர் ஆகியவற்றுடன் சுமார் 60 கி.மீ கடந்து வட்டமலைக்கரை ஓடை அணை வந்தடைந்து நிரம்பி, பின்பு உபரி நீர் அமராவதி ஆற்றில் சங்கமமாகிறது.

இந்நிகழ்ச்சியில் கண்காணிப்பு பொறியாளர் (நீர்வளத்துறை, அமராவதி வடிநிலக் கோட்டம்) மாரியப்பன், செயற்பொறியாளர் ரா.சுப்பிரமணியன், உதவி செயற்பொறியாளர் கு.நாட்ராயன், உதவிப் பொறியாளர்கள் (உப்பாறு அணை) சு.சிவராஜா, (அமராவதி வடிநிலப்பிரிவு) அ.மு.கோகுல சந்தானகிருஷ்ணன், காங்கேயம் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் கே.கே.சிவானந்தன், மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் கே.சண்முகசுந்தரம் உள்பட மாவட்ட, ஒன்றிய, பேரூர், கிளை கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் அரசு கலைக் கல்லூரி எதிரில் தாட்கோ திட்டம் மூலம் ரூ 5.85 கோடிமதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் ஆதிதிராவிடர் மாணவர் விடுதியை வனம் மற்றும் காதிகிராமத் தொழில் வாரிய துறை அமைச்சர் க.பொன்முடி, தமிழ்நாடு சட்டமன்ற பேரவை நிறுவனங்கள் குழு தலைவர் நந்தகுமார், ஆகியோர் தலைமையில்தமிழ்நாடு சட்டமன்ற பொது நிறுவனங்கள் குழு உறுப்பினர்கள் துரை சந்திரசேகர், மு.பெ. கிரி, சிந்தனைச்செல்வன், சட்டமன்ற பேரவை முதன்மை செயலாளர் சீனிவாசன்,ஆகியோர் ஆய்வு மேற்கொண்டனர். உடன் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ,ஆரணி எம்.பி. எம்.எஸ்.தரணிவேந்தன்,விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் ஷேக் அப்துல் ரஹ்மான்ஆகியோர், சப் கலெக்டர் திவ்யான் ஷு நிகம் உள்ளனர்.



சுற்றுலாத் துறை அமைச்சர் ஆர்.இராஜேந்திரன் கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டத்திற்குட்பட்ட பிச்சாவரத்தில் மேற்கொள்ளப்படும் வளர்ச்சித் திட்டப் பணிகளையும், படகு குழாமில் இயக்கப்படும் படகினையும் நேற்று (05.04.2025) பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் சிதம்பரம் சார் ஆட்சியர் கிஷன்குமார், மாவட்ட சுற்றுலாத்துறை அலுவலர் த.கண்ணன், உதவி இயக்குநர் உமா சங்கர், உதவி செயற்பொறியாளர் செ.ரத்தினவேல், மண்டல மேலாளர் பிரவு தாஸ், வட்டாட்சியர் பிரகாஷ் உட்பட பலர் உள்ளனர்.



பண்ருட்டி நகர தி.மு.க. சார்பில் முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு , நகர கழக செயலாளர் க.இராஜேந்திரன் தலைமையில், கடலூர் டாக்டர் கொ. நந்தகோபாலகிருஷ்ணன் முன்னிலையில் அறுசுவை உணவு வழங்கப்பட்டது. இதில் தணிகை செல்வம் , ஆனந்தி சரவணன் , கதிர்காமன், சிவா , ராஜா , ராமலிங்கம், கௌரி அன்பழகன், பிரபு , பரணிசந்தர் , ராம்குமார், சீனிவாசன், சசிகுமார் , பாரி, லோகநாதன், ஏழுமலை ,செந்தில்குமார், சம்பத், ராஜா, பாலச்சந்தர் ,பார்த்திபன் ,ராஜ முகம்மது ,எஸ்.பி.ராஜா, மோகன் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.